2ம் உலகப் போரில்

யப்பானில் அணுகுண்டு வீசியதுபோல் வடக்கிலும் குண்டுவீசி அழிக்க வேண்டும்

நாடாளுமன்றில் ஐ.தே.க. எம்.பி.

(கொழும்பு) யப்பானில் ஹிரோஷிமா வில் குண்டு வீசியதுடன் 2-ம் உலகமகாயுத்தம் முடிவிற்கு வந்தது. அதுபோல் வடபகுதி யிலும் குண்டு வீசி அழிக்கு மாறு தென்பகுதி மக்கள் கூறுவதாக ஆளும் ஐக்கிய தேசியக்கட்சி எம். பி. திரு. (4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

அலகு 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஐப்பசி 30 இதழ் 278
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 15 — 11 — 1992

சுப்பிரமணிய சுவாமிக்கு பலத்த பாதுகாப்பு

(சென்னை) ஜனதா கட்சி தலைவர் திரு. சுப்பிரமணியசுவாமிக்கு பலத்த பாதுகாப்பு வழங்குமாறு தமிழக காங்கிரஸ் முக்கியஸ்தர் திரு. மூப்பனார் மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். தமிழக முதலைவர் ஜெயலலி (4-ம் பக்கம் பார்க்க)

புதிய பத்திரிகை வழக்கு தாக்கல்

(கொழும்பு) நுவரெலியா நகரசபைத் தலைவருக்கு எதிராக 'புதிய' பத்திரிகை மானநஷ்ட வழக்கு தாக்கல் செய்துள்ளது. இவ்வழக்கில் ஒரு லட்சம் ரூபா மானநஷ்டம் (4ம் பக்கம் பார்க்க)

★ மட்டக்களப்பு காக்காச்சிவெட்டையில்

கடத்தப்பட்ட தமிழர் பலரின் உருக்குலைந்த சடலங்கள் மீட்பு

எரிந்த நிலையிலும் சடலங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - காக்காச்சிவெட்டை கிராமத்திலிருந்து சிறிலங்கா படையினரால் கடத்திச்செல்லப்பட்டு காணமல் போனதாகக் கருதப்படும் 40 தமிழர்களில் பலரது சடலங்கள் உருக்குலைந்தநிலையிலும், எரிந்த நிலையிலும் கிடக்கக் காணப்பட்டதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாத பிற்பகுதியில் இக்கிராமத்தை சுற்றிவளைத்த படையினர் 90 க்கும் மேற்பட்ட தமிழ் மக்களை கடத்திச் சென்று பின் 49 பேரை விடுதலை செய்தனர். ஏனையோர் பின் காணமல் போய் விட்டனர்

காணமல் போனதாகக் கூறப்பட்ட பலரது சடலங்களை உருக்குலைந்த நிலையிலும், எரிந்த நிலையிலும் தாங்கள் கண்டதாக உறவினர்கள் தெரிவித்துள்ளனர். இது குறித்து ஜனாதிபதிக்கும் மகஜர்கள் அனுப்பியுள்ளனர்.

ஏற்கனவே இதுகுறித்து காணமல் போனோரின் உறவினர்கள் சர்வதேச மன்னிப்புச் சபை பிரதிநிதிகளிடம் நேரில் முறையிட்டு ஏனையோரை மீட்டுத்தருமாறும் கோரியுள்ளனர் (சி)

அராலித்துறையிலிருந்து ஷெல், கலிபர் தாக்குதல்

(யாழ்ப்பாணம்) அராலித்துறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினர் நேற்று பகல் சரமாரியான எறிகணைத் தாக்குதலை நடத்தினர். கலவுண்டாய் வெளி, அராலி, வட்டுக்கோட்டைப் பகுதியில் இந்த எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. இராணுவத்தினர் காலை 7 மணி முதல் 12 மணிவரை 5) கலிபர் துப்பாக்கிப் பிர (4-ம் பக்கம் பார்க்க)

ரெலோவின் புதிய திட்டத்தை தமிழ்க் கட்சிகள் எதிர்க்கும்?

(கொழும்பு) வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்பை நிராகரிக்கும் ரெலோவின் புதிய திட்டத்தை ஏனைய தமிழ் கட்சிகள் எதிர்க்கும் சாத்தியமிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே இந்தக் கட்சிகள் இணைப்பை வலியுறுத்தி வருவதால் 'ரெலோவின்' புதிய (4ம் பக்கம் பார்க்க)

4 பீரங்கிப் படகுகள் கடற்படைக்கு கிடைக்கும்

(கொழும்பு) வடக்கு கிழக்கு கடற்பகுதிகளில் ரோந்துப் பணிகளில் ஈடுபடுத்துவதற்கென நான்கு அதிவேக பீரங்கிப் படகுகள் 36 கோடி ரூபாவில் அமைக்கப்படவுள்ளது.

கொழும்பு டொக்யாட் நிறுவனம் இந்தப் பீரங்கிப்படகுகள் அமைக்கும் பொறுப்பினை ஏற்றுள்ளது.

இந்தப் படகுகள் அமைக்கும் பணியில் 15 பொறியியலாளர்கள் ஈடுபடவுள்ளனர். இவர்களுக்கு பீரங்கிப்படகு (4ம் பக்கம் பார்க்க)

மாவீரர் எழுச்சி வாரம் இன்று தமிழீழமெங்கும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்) மாவீரர் வாரத்தை முன்னிட்டு யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் எழுச்சி வாரம் இன்று ஆரம்பமாகின்றது.

இவ்எழுச்சி வாரத்தில் வீதிகள், வைத்தியசாலைகள், இடம் பெயர்ந்தோர் முகாம்கள், வாய்க்கால்கள், பாடசாலைச் சுற்றுப்புறங்கள் ஆகியவற்றில் 4-ம் பக்கம் பார்க்க)

கிளாலி படகு சேவை மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்) நேற்று முன் தினமிரவு தொடக்கம் அதிகாலை வரையில் கிளாலிப் படகுச் சேவை நடைபெற்றதையடுத்து அலங்கேணிப்பகுதியில் தரித்து நின்றவர்கள் அநேகமானோர் யாழ். வந்து சேர்ந்தனர்.

கிளாலியில் தரித்து நின்றவர்களும் நேற்று முன்தினம் (4-ம் பக்கம் பார்க்க)

ரோகண விஜயவீரா இறந்துவிட்டாரா?

(கொழும்பு) ஜே. வி. பி. தலைவர் ரோகண விஜயவீரா இறந்துவிட்டாரா? என்பது நம்பமுடியாது இருப்பதாக அம்பாந்தோட்டை சுதந்திரக்கட்சி எம். பி. திரு. மகிந்த ராஜ (4-ம் பக்கம் பார்க்க)

தமிழீழ மீட்பு நிதி 1000பேருக்கு கடன் மீளளிப்பு

(யாழ்ப்பாணம்) தமிழீழ மீட்புநிதிக் கடன் திட்டத்திற்குப் பங்களிப்புச் செய்தோரில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆயிரம் கடன் பத்திரதாரர்களின் கடன் 1992 மாவீரர் வாரத்தில் மீளளிக்கப்படவுள்ளதாக விடுதலைப் புலிகளின் நிதிப் பிரிவுப் பொறுப்பாளர் திரு செ. தமிழேந்தி தெரிவித்துள்ளார்.

நல்லூர்
யா/ந/21. 25, 490 506 2397, 4209, 3447, 5605. 1299

(2-ம் பக்கம் பார்க்க)

கடும் மழை, புயல் அகோரம் தமிழகத்தில் 64 பேர் பலி!

(சென்னை) தமிழகத்தில் கடந்த இரு தினங்களில் கடும் புயல் பெரும் மழை காரணமாக 64 பேர் பலியாஞர்கள். நூற்றுக்கணக்கான வீடுகள் சேதமடைந்துள்ளன.

ஆறுகள் உடைப்பெடுத்தன

இங்குள்ள ஆறுகள் பல உடைப்பெடுத்திருப்பதால் சில கிராமங்களும், நெல் வயல்கள் பலவும் நீரில் மூழ்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. குழந்தைகள், சிறுவர்கள், பெண்களும் உயிரிழந்துள்ளனர்.

திருநெல்வேலி கட்டபொம் (4-ம் பக்கம் பார்க்க)

காடும் கனிவாய் வளர்ந்திடவே
நாடும் நலமாய் ஓங்கிடுமே

வரி விளம்பரம்

சித்திரம் கைநூல்

சித்திரப்பாடம் பயிலும் சகலரிக்கும் ஏற்ற கைநூல் சித்திரம் ஆண்டு 11) இன்றே வாங்குங்கள் ஆக்கம்: யசோ (ஆசிரியர்- சித்திரம் விஞ்விடை) (சி-6961)

பாகற்காய் குளிகை

சலரோக நோயைக் கட்டுப்படுத்தக்கூடிய Karawilla Capsules. கிடைக்குமிடம்: எஸ். ஜி. மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (சி-6951)

வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்புநோய், பீநிசம், தலையிடி, தலை காலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து, இரத்தப்போக்கு, வெள்ளைகழிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு மூலவியாதிகள், மூத்திரரோகங்களில் பிரபலமானவர் சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம். 121. 2-ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (சி-6954)

கலை நிகழ்ச்சி

(தாளையடி)

செம்பியன்பற்று வடக்கு இடம்பெயர்ந்தோர் முகாமிலுள்ள பாலர் பாடசாலை கலை நிகழ்ச்சிகள் தாளையடி பங்குத் தந்தை அருட்திரு. எம். டேவிட் அடிகள் தலைமையில் நடைபெற்றன. (108)

யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டையில் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும், யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சிநேக பூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில், முதலாவது பிரிவில் யாழ்ப்பாணக் கல்லூரி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (159)

இராசி பலன்

15-11-1992

ஞாயிற்றுக்கிழமை

(தமிழுக்கு ஐப்பசி 30)

பஞ்சமி மு. ப. 10-48வரை, புனர்பூசம் மாலை 5-53 வரை. சித்தயோகம் இராகுகாலம் மாலை 4-37 முதல் 6-37 வரை, சுபநேரம் காலை 9-07 முதல் 10-37 வரை.

மேடம்- வாக்குச் சாதுர்யம், தொழில் சிறப்பு, குடும்ப மகிழ்ச்சி

இடபம்- தொழில் முடக்கம், சகோதர பகை, அலைச்சல்

மிதுனம்- சமாதான முயற்சி, தொழில் உறவு, பண வரவு.

கடகம்- வீண் தகராறு, ஏமாற்றம், மனவேதனை.

சிங்கம்- அதிக பிரயாசம், குடும்ப செலவு, பயணம்.

கன்னி- மறைமுக நன்மை, புதிய சிந்தனை, தானதர்மம்.

துலாம்- கடும் சினம், அயல்வர் பகை, மனச்சங்கடம்.

விருச்சிகம்- கடும் சோகம், உடல் உபாதை, பணமுடை.

தனுசு- வாக்குவன்மை, கண்துடைப்பு, நற்பெயர்.

மகரம்- அதிக முதலீடு, கற்பனை, சுபகாரியம்

கும்பம்- வைத்திய செலவு, குடும்ப பிரிவு, தனிமைப் படல்.

மீனம்- காரிய தாமதம், பங்காளிகள் துயரம், அதிக யோசனை.

— ஜோஸ்யம்

பெற்ரோல், பற்றறிகளை படகில் கடத்தியோர் கைது

(கொழும்பு)

இராமேஸ்வரத்திலிருந்து பெற்ரோல், பற்றறி போன்றவற்றை கடத்தி வந்த படகு ஒன்றை பாதுகாப்புப்படையினர் பேசாலையில் கைப்பற்றினர்.

இந்தப்படகில் மேற்படி கடத்தப் பொருட்களைக் கொண்டு வந்த கோஷ்டி ஒன்றும் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டிருக்கிறது. (இ)

தொலைபேசிக் கம்பங்களில் அறிவித்தல்கள் ஒட்டத் தடை

(கொழும்பு)

தொலைபேசிக் கம்பங்களில் எந்தவிதமான அறிவித்தல்களையும் ஒட்டுவதற்கு அரசாங்கம் தடைவிதித்துள்ளது.

அரசியல் கட்சிகளின் அறிவித்தல்களும், பொதுக்கூட்டங்கள் சம்பந்தமான அறிவித்தல்களும் மற்றும் தனிப்பட்டோரின மரண அறிவித்தல்கள் போன்றவையும் தொலைபேசிக் கம்பங்களில் ஒட்டப்படுவது அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

தொலைபேசிக் கம்பங்களில் இவை ஒட்டப்படுவதால் தொலைபேசிகள் இணைக்களத்துக்கு அது பிரச்னையாக இருப்பது தெரிவிக்கப்பட்டிருப்பதை அடுத்தே அரசாங்கம் இந்தத் தடையை விதித்துள்ளது. (இ)

மகளிர் பொற்கணக்கு கலை எல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியின் மகளிர் பொற்கணக்கு சேமிப்புத் திட்டம் மகளிர் மத்தியில் பெற்றிருந்த வரவேற்பின் காரணமாக இக்கணக்கை ஆரம்பிக்கும் கால எல்லை இம்மாதம் 30ம் திகதிவரை நீடிக்கப்பட்டிருப்பதாக இலங்கை வங்கி முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

இத்திகதிக்குமுன் ஆரம்பிக்கப்படும் கணக்குகள் எதிர்வரும் பங்குனி மாதத்திலும் ஆவணி மாதத்திலும் நடைபெறவிருக்கும் இரு மாபெரும் அதிர்ஷ்ட பரிசுத் திட்டத்திலும் சேர்த்துக் கொள்ளப்படும் என்றும் மாதாந்தம் பணம் செலுத்தும் கணக்குகளை ஆரம்பித்தவர்கள் தங்கள் மாதாந்த தொகையை குறிப்பிட்ட மாதங்களில் சேமித்துக் கொள்வதனை உறுதிப்படுத்துவதன்மூலம் இரு பரிசுத் திட்டங்களிலும் கலந்து கொள்ள வாய்ப்பு உண்டு என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதார அபிவிருத்தி கட்டுரை, சுவரொட்டி, பேச்சு போட்டி முடிவுகள்

(நல்லூர்)

'யுனிசெவ்' உதவியுடனும் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடனும், யாழ். மாநகராட்சி மன்றத்தால் சுகாதார அபிவிருத்தி சம்பந்தமாக பாடசாலைகளிடையே நடைபெற்ற கட்டுரை பேச்சு சுவரொட்டிப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை 16ம் திகதி யாழ் இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் விபரம் வருமாறு:-

கட்டுரைப்போட்டி-கனிஷ்ட பிரிவு: க. துஷ்யந்தன்-யாழ். பரியோவான் கல்லூரி, யோ. மேரிறோசா - யாழ்' சென். ஜேம்ஸ் மகளிர்வித்தியாலயம், ந. அனந்தலெட்சுமி-யாழ். நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை.

கட்டுரைப் போட்டி-சிரேஷ்ட பிரிவு: யோ. அன்ரனி பூட்-யாழ் மத்திய கல்லூரி யாழ்ப்பாணம், ச. செந்தூரன்- யாழ். இந்து கல்லூரி, செ. மீனாட்சினி-யாழ். இந்து மகளிர் கல்லூரி.

பேச்சுப் போட்டி - கனிஷ்ட பிரிவு: க. யோகேந்திரம் - யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை, க. அன்ஜெயகரன்-யாழ். பரியோவான் கல்லூரி. த. கௌசல்யா -யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

பேச்சுப் போட்டி - மத்திய பிரிவு; கு. திவாகரி- யாழ். பரியோவான் கல்லூரி, கி. பிரவீன்-யாழ்.மத்திய கல்லூரி, சி. செல்வநாயகம் - யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி.

பேச்சுப் போட்டி - சிரேஷ்ட பிரிவு; சி. மேகலா - யாழ். சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, கா. இ. சிறிதரன் - யாழ் மத்திய கல்லூரி, ஜீ. சிவதர்சினி - யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.

சுவரொட்டிப் போட்டி - கனிஷ்ட பிரிவு:

ச. சாந்தரூபன் - யாழ். பரியோவான் கல்லூரி, கே. ஆம்சோபனா - யாழ், திருக்குடும்ப கன்னியர்மடம் ஆங்கில பாடசாலை, செ. டியான்சி மிராண்டா - யாழ். சென் ஜேம்ஸ் மகளிர் வித்தியாலயம்

சுவரொட்டிப் போட்டி - சிரேஷ்ட பிரிவு: எம். எம். றொமான்ஸ் - யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி, த. சசிதரன் - யாழ். புனித சாள்ஸ் மத்திய வித்தியாலயம், அ. லைனா - யாழ். வேம்படி மகளிர் கல்லூரி. (158)

தமிழீழ மீட்பு நிதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம்

யா/யா/59, 178, 544, 3417, 4318, 195, 4687.

கோப்பாய்

யா/கோ/3795, 5674, 715. 3145, 6315

மானிப்பாய்

யா/மா/2834, 3667, 14, 119, 3292.

தெல்லிப்பழை

யா/தெ/139, 602, 913, 4138.

சங்கானை

யா/ச/3169, 3184, 4115.

காரைநகர்

யா/கா/356, 79, 714.

வேலணை

யா/வே/176, 218, 1284, 1771, 1887, 87, 829, 1503, 1981.

கரவெட்டி

யா/க/20, 274, 477, 829, 834, 27, 128, 2697, 3263, 4190.

பருத்தித்துறை

யா/பரு/109, 376, 729.

சாவகச்சேரி

யா/சா/569, 816, 66, 3426, 4311.

வெளியகல்வு

யா/வெ/41, 705. 903, 794, 837.

உடுவில்

யா/உ/3026 (தொடரும்)

தென்னைக்கு உரமிடுவதற்கு மாரிகாலம் ஏற்றதாகும்

(யாழ்ப்பாணம்)

தென்னை ஒவ்வொரு மாதமும் பூத்துக் காய்த்துப் பயன் தரும். வருடம் பூராவும் பல வித பயன்களைத் தருவதால் தரையில் உள்ள ஊட்டச்சத்து வெகுவிரைவில் இழக்கப் படுகிறது. இந்த இழப்பை ஈடுசெய்வதன்மூலம் தொடர்ச்சியான நல்ல பயனைப்பெற முடியும்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு கழகம் விடுத்துள்ள பத்திரிகை குறிப்பில் இவ்வாறு அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உரமிடுவதன் மூலம் தரையின் ஊட்டச்சத்தை அதிகரிக்கலாம் தமிழீழப் பிரதேசத்தில் மாரிகாலம் உரமிடுவதற்கு ஏற்றகாலமாகும் எனவே தெங்குச் செய்கையாளர்களும் வீட்டுத் தோட்டங்களில் தென்னை பயிரிட்டுள்ளவர்களும் இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்

ஐந்து வருடத்திற்கு உட்பட்ட இளம் தென்னம் கன்று ஒன்றுக்கு 2 கிலோ (Y.P.M) வை. பி. எம் இளம் மரக் கலவை உரமும் ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட காய்க்கும் தென்னை மரங்களுக்கு 2 1/2 கிலோ (A P.M.) ஏ பீ. எம் (முதிர்மரக் கலவை) உரமும் இடுதல் அவசியம். ஆக வயதிற் குறைந்த இளம் தென்னங் கன்றுகளுக்கு வயதுக்கேற்ற வித்தியாசமான அளவுகளில் உரமிடுதல் வேண்டும். (Y.P.M.' A.P.M. வை. பீ எம்., ஏ பீ. எம்.) கலவை உரங்களை நேரடியாக எடுக்க முடியாதவிடத்து அமநல சேவை நிலையங்களில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் உரமிடுதல் பீடைகள் பற்றிய தொழில்நுட்ப ஆலோசனைக்கு தென்னை பயிர் செய்கை சபை யாழ் மாவட்ட தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. ஜே. சத்தியேந்திரனுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

அனித்தா பயிற்சி நிலையம்

★ Sugar Craft ★ Facial
★ Bridal Makeup ★ Needle Work
★ Cookery ★ Cake Icing
★ Hair Style ★ Flower Making

வகுப்புக்கள் தற்போது நடைபெறுகின்றன

அனித்தா பயிற்சி நிலையம்

பூநாறி மரத்தடி, கே. கே. எஸ் வீதி, கொக்குவில். (ஏ-2589)

அறிவித்தல்

சகல பொதுச்சபை பிரதிநிதிகளுக்கும்

விசேட பொதுக் கூட்டம் 9-12-1992

எமது சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் 9-12-1992ந் திகதி புதன்கிழமை காலை 10-00 மணிக்கு சங்க தற்காலிக பணிமனையில் பி. எஸ் சேவிஸ் நிலையம், யாழ்ப்பாணம் சங்கத் தலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் அவர்கள் தலைமையில் கூட்டப்பெறும். அவ்வாறு கூட்டத்திற்கு சமூகமளித்து ஒத்துழைப்பு நல்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

செயலாளர்,

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்,

முக்கிய குறிப்பு: கூட்ட நிகழ்ச்சி நிரல் கிடைக்கப்பெறாதோர் தங்கள் கிளையிலோ அல்லது தலைமைக் காரியாலயத்தில் செயலாளருடனோ தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். (ஏ-2591)

கம்பியூட்டர் கல்வி

● BASIC ● d BASE III + ● LOTUS 1-2-3
● WORD PROCESSING ● PASCAL
● COMPUTER TECHNOLOGY

புதிய வகுப்புகள் ஆரம்பம்

16 - 11 - 1992 திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்

21 - 11 - 1992 சனி, ஞாயிறு வகுப்புக்கள்

மேலதிக விபரங்களுக்கு:

UNIKCO COMPUTER CENTRE

37, CLOCK TOWER ROAD, JAFFNA.

வெலிங்டன் சந்திக்கு வடக்குப் புறமாக உள்ள மேல் மாடியில்

(ஏ- 2590)

★ இன்று தமிழீழ மாவீரர் எழுச்சி வாரம் ஆரம்பம்

சாவினை துச்சமென நேருக்கு நேர் சந்தித்தவர்கள் மாவீரர்கள்

உயிர்களை நேசித்தவர்கள் ஆனால் தங்கள் உயிர்களை அல்ல. சாவினை ஏற்றவர்கள் ஆனால், பிறரின் சாவினை அல்ல இவர்கள் தான் மாவீரர்கள் ''வாழவேண்டுமென்ற துடிப்பு சாவிலும் வலியது'' என்பது ஒரு வியட்நாமியக் குரல் எங்களது மாவீரர்கள் நிதர்சனமாக்கினர். வாழ வேண்டுமென்ற துடிப்பு அவர்களிடம் அபாரம். ஆனால், தங்கள் வாழ்வை எண்ணியல்ல. தம் இனத்தின் வாழ்வை எண்ணிய எதிர்கால சந்ததியின் வாழ்வை எண்ணிய, தாயக சுதந்திரத்தின் வாழ்வை எண்ணிய, உன்னதமிகு துடிப்பு. ஆதலால் வெல்லமென உயிர் இவர்க்குச் சுவைக்க வில்லை. சாவினைத் துச்சமென நேருக்கு நேர் சந்தித்துக்கொண்டார்கள்.

உலகிலே மிகச் சிறந்ததெனக் கருதப்பட்டு வந்தன சில தானங்கள் அவற்றினது பெறுமதியே இழந்து போய் விட்டது எம்மாவீரர் தானத்தால். இது உயர்தானம்.

வளைந்து கிடந்த இனத்தை நிமிரச் செய்தது. எம்தேசிய கீதங்களை உணர வைத்தது தேசியக்கொடியினை உயர்த்த வைத்தது. வான் வரை உயர்ந்து முகிலினை வருடிவிடு கின்றது எமது வாடி. அனைத்துலகமே எம்மை பிரமிப்பாய் நோக்குகிறது. இத்தகு சாதனையாளர்களே. ''எமது மாவீரர்கள்'' என் கையில் எம்முள்ளே உறுதி பெருகுகிறது; நெஞ்சு நிமிர்கிறது. உயிர்மூச்சில் பெரும் வலுபிறக்கிறது கலை அடக்குமுறைகளையும் கர்த்தெறிந்த சுதந்திர சமதர்ம தமிழீழம் கண்ணெதிரே மிளிர்கிறது.

மாவீரர் வார ஏற்பாடுகள்

சிரமதானப்பணி

(அரியாலை)

மாவீரர் வாரத்தையொட்டி யாழ். இராசாவின் தோட்டம், யாழ். மடம்வீதி ஆகியபகுதிகளில் சிரமதானப் பணிகள்மூலம் வாய்க்கால், வீதிகள் திருத்தப்பட்டு வருகின்றன. (59)

வீதிகள் துப்பரவு

(உடுவில்)

மாவீரர் வாரத்தையொட்டி கிராம வீதிகள் துப்பரவு செய்யும் பணியில் பாடசாலை மாணவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாசாலை, சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை ஆகியவற்றின் ஆசிரியர்களும் மாணவர்களும் சிரமதானப் பணிமூலம் கந்தரோடை சுன்னாகம் பிரதான வீதியை துப்பரவாக்கியுள்ளனர். (109)

பந்தல்கள்: வளைவுகள்

(சித்தன்கேணி)

மாவீரர் வாரத்தையொட்டி சித்தன்கேணி, சங்கானை, சுளிபுரம் ஆகிய பகுதிகளில் பெரிய அளவிலான பந்தல்களும், வளைவுகளும் அமைக்கப்பட்டு வருகின்றன.

பொதுமக்களின் உதவியுடன் வளைவுகளையும் பந்தல்களையும் வட்டஅவையினரும் வர்த்தகர்களும் முன்னின்று அமைத்து வருவது இங்கு குறிப்பிடத்தக்கது. (137)

மன்னார்

ஆகதிகளுக்கு நீர் விநியோகம்

(மன்னார்)

மன்னாரில் உள்ள ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தினரால் பராமரிக்கப்படும் அகதிமுகாம்களுக்கு போதுமான நீர்வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

நீர்வசதிக்காக 8000 லீற்றர் நீர் கொள்ளக்கூடிய பவுசர் மற்றும் இதர பவுசர்கள் மூலம் நீர்விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (157)

பயிற்சி வகுப்பு

(பண்டத்தரிப்பு)

யு. எஸ். எயிட்-கெயர் விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு விவசாய திணைக்களத்தின் அனுசரணையுடன் நெற்செய்கை பற்றிய பயிற்சி வகுப்புகள் நடாத்தப்படவுள்ளது. (72)

★ உள்ளூரில் குழப்பம் ஏற்படுத்த

வெளிநாடுகளின் துணையை எதிரணியினர் நாடுகின்றனர்!

(கொழும்பு)

வெளிநாட்டுச் சக்திகளின் உதவியுடன் உள்ளூரில குழப்பதை ஏற்படுத்த ஒருபிரிவினர் இப்போது முயற்சித்து வருகின்றனர். இவர்களை தேசத்துரோகிகள் என்றே குறிப்பிடவேண்டும் இவர்கள் விடயத்தில் நாம் விழிப்புடன் இருக்கவேண்டும்.

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா இவ்வாறு கூறினார்.

தென்பகுதியில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது:

பாதயாத்திரைகள் நடத்துவதாலும், கைகோர்த்து நிற்பதாலும் பிரச்னைகளைத்தீர்த்து விடமுடியாது.

மனித உரிமைகள் மீறப்படுகின்றன என்று கூறுவோரின் ஆட்சிக்காலத்தில் நடந்தது என்ன? அவற்றைமக்கள் இன்னும் மறந்துவிடவில்லை.

அரசியல் போராட்டம் என்ற தலைப்பில் உள்நாட்டில் குழப்பங்களை விளைவித்து எதிர்க்கட்சிகள் லாபம் தேட முற்படுகின்றன. இந்த நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு சக்திகளின் உதவிகளும் இவர்களுக்குக் கிடைத்து வருகின்றது என்றார். (இ)

தீவிரவாத நடவடிக்கையால்

தெற்கில் ஐயாயிரம் பேர் படுகொலை செய்யப்பட்டனர்

(கொழும்பு)

1988, 89 காலப்பகுதிகளில் தென்பகுதியில் இடம்பெற்ற தீவிரவாத நடவடிக்கையினால் ராணுவம், பொலிஸ், அரச ஊழியர்கள், அரசியல் கட்சி உறுப்பினர்கள், பொதுமக்கள் ஆகியோர் தரப்பில் சுமார் ஐயாயிரத்திற்கும் மேற்பட்டோர் படுகொலை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்காலப்பகுதியில் உ. அ. அ. கட்டிடங்கள், கிராமசேவையாளர்கள் காரியாலயங்கள், ரெயில்வே நிலையங்கள் உட்பட பத்தாயிரத்துக்கும் அதிகமான கட்டிடங்கள் சேதமாக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

178 ராணுவத்தினர், 319 பொலிஸார்கள், 1772 ஐ.தே.க. உறுப்பினர், 100 சிறிலங்கா சுதந்திரக்கட்சியினர், 449 அரச ஊழியர்கள். 15சிறிலங்கா மக்கள் கட்சியினர், 2583பொது மக்கள், 60 ராணுவத்தின் உறவினர்கள், 70 பொலிஸாரின் உறவினர்கள் உட்பட பலர் இக்காலப்பகுதியில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்டவர்களில் அதிகமானோர் துப்பாக்கியால் சுட்டுக்கொலைப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது இந்தச்சம்பவங்களுக்கு ஜே. வி. பி. யினரே காரணம் என்று அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (ரி)

மரம் நடுகை போட்டி திட்டம்

(யாழ்ப்பாணம்)

மரம்நடுகை போட்டி திட்டத்தில் பங்குபற்றும் மாணவர்களையும் சகலகல்லூரி அதிபர்களையும் கொத்தணிக்குழு, கோட்டக்குழுவில் உள்ள ஆசிரியர், உறுப்பினர்களையும் நாளை 16-ம் திகதி காலை 9-00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்திற்கு சமூகந்தருமாறு பிரதி கல்விப்பணிப்பாளர் சி வேலாயுதம் கேட்டுள்ளார்.

இன்று

(கொழும்புத்துறை)

இருபாலை தமிழ் மாமன்றம் நடாத்தும் மொழிதிறன் தேர்வுப பரீட்சை இன்று 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணிக்கு யாழ். மாவட்டத்தில் பல பாடசாலைகளில் நடைபெறவுள்ளது. (154)

0 0 0

(யாழ்ப்பாணம்)

மாவிட்டபுரம் கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டமும் ஆண்டுப் பொதுக் கூட்டமும் இன்று 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலையில் நடைபெறும்.

0 0 0

(உடுவில்)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலைகள் இணைந்து நடாத்தும் கலைவிழா நிகழ்ச்சி இன்று 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. மருதனாமடம் இராமநாதன் கல்லூரியில் இயங்கும் யூனியன் கல்லூரி கலைக்கூட மண்டபத்தில் கலைவிழா நடைபெறவுள்ளது.

மகாவலித் திட்டத்தின் கீழ்

தமிழர் பிரதேசங்களை அரசுடமையாக்க முயற்சி

(கொழும்பு)

மட்டக்களப்பு, பொலநறுவ எல்லைப் பகுதியில் தமிழர் பிரதேசங்கள் மகாவலி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் அரசுடமையாக்கப்படவிருப்பதாக காணி மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி அத்துகோறள தெரிவித்துள்ளார்.

இந்த எல்லைப் பகுதியில் வாழ்ந்துவந்த தமிழ் மக்கள் வெளியேறியதால் யானைகள் இங்குள்ள பயிர்செய் நிலங்களை அழித்துவருவதாகவும் அமைச்சர் குறைபட்டார்.

பொலநறுவ, மட்டக்களப்பு எல்லைப் பகுதியில் அடிக்கடி ஸ்ரீலங்காப்படையினர் மேற்கொள்ளும் தாக்குதல் நடவடிக்கைகளுக்கு அஞ்சியே இப்பகுதி தமிழ் மக்கள் வெளியேறி வருவதாகவும் தமிழ் மக்கள் தரப்பிலிருந்து தெரிவிக்கப்படுகிறது.

முன்னரும் மாதுருஓயா என்ற திட்டத்தின்கீழ் மட்டக்களப்பின் ஒரு பகுதி மாத்தளை மாவட்டத்துடன் இணைக்கப்பட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ஈ)

10,000 கட்டிடங்கள் சேதம்

இலங்கையைவிட்டு நகர்ந்த சூறுவளி ராமேஸ்வரத்தை தாக்கியது

(சென்னை)

இலங்கையில் நிலைகொண்டிருந்த சூறுவளி நேற்று அங்கிருந்து அகன்று தமிழகத்தின் இராமேஸ்வரம் பகுதியைத் தாக்கி உள்ளிட்டது.

இதனால் இராமேஸ்வரம் பெரிதும் பாதிக்கப்பட்டது. இராமேஸ்வரம் கடற்பிரதேசத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சுமார் 200 படகுகள் சேதமடைந்தன 15 படகுகள் நீரில் மூழ்கின.

பாம்பன் ரயில் பாதையின் ஒரு பகுதி வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது. இராமேஸ்வரத்துக்கான அனைத்துரயில் சேவைகளும் பாதிக்கப்பட்டன,

சூறுவளி தமிழகத்தை விட்டு அரபுக்கடலுக்கு நகர்ந்துவிடும் என்று நேற்று தெரிவிக்கப்பட்டது.

எனினும் பாக்கு நீரினையிலும் மன்னார்கடல் பகுதியிலும் கொந்தளிப்பாக இருக்கும் எனவும் மீனவர்கள் கடலுக்குச் செல்லக்கூடாது எனவும் எச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது. (இ)

செயன் முறைப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலகவியல் சம்மேளனம் நடாத்தும் நூலகவியல் பயிற்சிநெறி மாணவர்களுக்கான செயன் முறைப் பயிற்சி வகுப்புக்கள் நாளை 16-ம் திகதி முதல் யாழ். பல்கலைக்கழக நூல் நிலையத்தில் நடைபெறவுள்ளது. (159)

மருந்து தட்டுபாடு

(நெல்லியடி)

வலிவெட்டித்துறை ஊறணி ஆஸ்பத்திரியில் வயிற்றோட்ட நோய்க்குரிய நரம்பு வழியாக ஏற்றப்படும் சேலன் விசர்நாய்க்கடிக்கான ஊசி மருந்துகளுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றன. (160)

★ தமிழீழ மாவீரர் நாள — 1992

மாவீரர்களே!

நெஞ்சினில் விடுதலைக் கனவைச் சுமந்தீர்
நெருப்பினில் ஆடியும் தேகம் இழந்தீர்
உங்களின் நினைவுடன் பயணம் தொடரும்
ஒருநாள் வெற்றிக் கொடிகள் உயரும்.

— தமிழீழ மாவீரர் பணிமனை

வடபகுதியில்
தாக்குதலை தொடர முடியாது
ராணுவத்தினர் திண்டாட்டம்

(கொழும்பு)

கிழக்கில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட 'ஒபரேஷன் ஜெயபாகர்' வெற்றியளிக்காத காரணத்தால் வடபகுதியில் ஏற்கனவே திட்டமிட்டிருந்த ராணுவ நடவடிக்கையைத்தொடர முடியாத நிலையில் இராணுவ தலைமைப்பீடம் திண்டாடுகிறது.

கிழக்கில் கிடைக்கும் வெற்றியினால் படையினருக்கு உற்சாகமூட்டி வடக்கிலும் பாரிய படையெடுப்பை நடத்துவதென ராணுவதலைமைப்பீடம் திட்டமிட்டிருந்தது.

கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்ட தோல்வியினால் படையினரி மட்டத்தில் ஒருசோர்வு நிலையேற்பட்டுள்ளது. இதனால் வடக்கே ஒருபடையெடுப்பை நடத்துவதா? விடுவதா? என்று ராணுவ தலைமைப்பீடம் திண்டாடிவருகிறது. (ரி)

குமாரி கப்பலிலிருந்து பொருட்கள் இறக்கம்

(புலோலி)

கடந்த இரு தினங்கள் இடைவெளிக்குப் பின்னர் குமாரி கப்பலிலிருந்து மா இறக்கும்பணி நேற்று (சனி) முதல் வழமைபோல் நடைபெற்றுவருகிறது.

கடும் காற்றும், கடும் மழையும் கடல்கொந்தளிப்பும் கடந்த இரு தினங்களாக கடுமையாக இருந்தபடியால் இவ்விரு தினங்களும் மா இறக்கும் பணி நடைபெறவில்லை.

நேற்றைய தினம் பருத்தித்துறை துறைமுகப்பகுதியில் கடல் கொந்தளிப்பின்றி, சீரான காலநிலை நிலவியது குறிப்பிடத்தக்கது. (61)

வெடிகுண்டிற்கு பயந்த ஜனாதிபதி பிரேமா

(புதுடில்லி)

இலங்கை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா அண்மையில் இந்தியாவுக்கு சென்றிருந்தபோது அங்கு அவருக்கு வெடிகுண்டுப் பயம் ஏற்பட்டதாக தமிழக சஞ்சிகை ஒன்று கூறியுள்ளது

ஜனாதிபதி புதுடில்லியில் பத்திரிகையாளர் கழகத்தில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியின் போது அந்த மண்டபத்தில் ஜனாதிபதிக்காக போடப்பட்டிருந்த ஆடம்பரமான 'குசன்' இருக்கையில் அமராது அதை அப்புறப்படுத்துமாறு கூறி காதரரண பிரம்புக்கதிரை ஒன்றை தருமாறுகேட்டு அதில் அமர்ந்துகொண்டே பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்தார்.

ஆடம்பரக் கதிரையில் வெடிகுண்டு மறைத்துவைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சத்திலேயே 'குசன்' கதிரையை அப்புறப்படுத்தியதாக கூறப்படுகிறது. (வி)

300 தபால் பொதிகள் தேங்கிக் கிடக்கின்றன

(யாழ்ப்பாணம்)

குமாரி கப்பலில் தபால் பொதிகள் எடுத்துச்செல்வதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி மறுத்துவிட்டதால் 300ற்கு மேற்பட்ட தபால் பொதிகள் பிரதம தபாலகத்தில் தேங்கியுள்ளது.

இதையடுத்து யாழ் பிராந்திய தபாலதிபர் திரு பி. எஸ் சேதுகாவலர் நேற்று முன்தினம் இங்கிருந்துகொழும்பில் தங்கியிருக்கும் யாழ். அரச அதிபருடன் தொடர்புகொண்டார்.

கூட்டுப்படை தலைமையகத்துடன் உடன் தொடர்பு கொண்டு முடிவு எடுப்பதாக அரச அதிபர் கூறியுள்ளார்.

கூட்டுப்படைத் தலைமையகம் குமணகப்பலில் மட்டுமே தபால் பொதிகளை எடுத்துச் செல்வதற்கு அனுமதியளித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (56)

இன்று

(நெல்லியடி)

யாழ். உடுப்பிட்டி மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் பேராசிரியர் அ துரைராசா பிரதம விருந்தினராக கலந்துகொள்வார். (160)

0 0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலைய விளையாட்டுக் கழகத்தின் தியாகி திலீபன் ஞாபக தடகள 2 வது ஆண்டு விழா விளையாட்டு இறுதிப் போட்டியும், பரிசளிப்பும் இன்று காலை யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலைய கிளினர் மண்டபத்தில் நடைபெறும்.

கடும் மழை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மன் மாவட்டத்தில் 34பேரும், விக்கிரமசிங்கபுரம் திருவள்ளுவர் காலனியில் நேற்று அதிகாலை 6 வீடுகள் இடிந்துவிழுந்ததில் 27 பேரும் உயிரிழந்துள்ளனர்.

பாபநாசத்தில் திருமண மண்டபம் இடிந்து விழுந்ததில் இருவரும், ஆழ்வார் குறிச்சியில் கட்டிடம் ஒன்று இடிந்து விழுந்ததில் மூவரும் பலியானார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் இருவர் உயிரிழந்ததுடன் எண்மர் காயமடைந்துள்ளனர். மேலும் முந்தம் என்ற இடத்திலிருந்து கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற மூவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தொடர்ந்து பெரும் மழை பெய்துவருவதினால் பல மாவட்டங்களின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளது. இந்த மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு ஹெலிக் கொப்டர் மூலம் உணவுப் பொட்டலங்கள் போடப்படுவதுடன், ஹெலியின் மூலமே மீட்புப்பணிகளும் நடைபெற்றுவருகின்றன.

திருநெல்வேலி மாவட்டத்தில் போக்கு வரத்தும், மின்சாரமும் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. வள்ளியூர் பகுதியில் 150 வீடுகளை வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

சிதம்பரநாதர் மாவட்டத்தில் 250 கட்டுமரங்கள் கடலால் அடித்துச்செல்லப்பட்டதுடன் இப்பகுதியில் ஒரு லட்சம் வாழைமரங்களும், வீதி ஓரமாக நின்ற 10 ஆயிரம் மரங்களும் அடியோடு சாய்ந்துவிட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை கேரளத்தில் புயல், மழையால் 17 பேர் உயிரிழந்துள்ளனர். (ரி-வி)

★ சூறுவளியில் கப்பல் சிக்கியது
இலங்கை கடற்படையிடம் இந்தியா உதவி கோருகிறது

(கொழும்பு)

கழிவு இரும்பு ஏற்றிக்கொண்டு தூத்துக்குடி துறைமுகத்துக்கு சென்றுகொண்டிருந்த இந்தியக் கப்பல் ஒன்று நேற்று வீசிய சூறுவளியினால் இலங்கையில் உள்ள 'அமுனுசம' கரையை நோக்கி அடித்துச் செல்வதாகச் செய்திகள் கூறுகின்றன.

அந்தக் கப்பலில் 14 பேர் இருந்தனர் என்றும், அவர்களில் ஒருவரைக் காணவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பலைக் காப்பாற்றுமாறு இலங்கைக் கடற்படைக்கு இந்திய அரசினால் அவசர வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

தெல்லி. வைத்தியசாலை கிளினிக்குகள் நிறுத்தம்

(பண்டதரிப்பு)

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலை நிர்வாகம் கந்தரோடை வாசிகசாலை மண்டபத்தில் வாரத்தில் 3 நாட்கள் நடாத்தி வந்த கிளினிக்குகள் இவ்வாரம் தொடக்கம் நிறுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இங்கு நடைபெற்று வரும் சலரோக சிகிச்சை, சிறுவர் சிகிச்சை மற்றும் கிசிச்சைகள் ஆகியவற்றிக் பல நூற்றுக கணக்கான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

வாசிகசாலை நிர்வாகத்தினர் தங்கள் மண்டபத்தில் தொடர்ந்தும் இக கிளினிக்குகளை நடாத்த இடமளிக்கவில்லை என்றும் இதனால் வேறு வசதியான கட்டிடம் கிடைக்கும் வரை இந்தக் கிளினிக்குகளை நிறுத்திவைக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (72)

கிளாலி படகு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இரவு அக்கரை போய்ச்சேர்ந்தனர்.

கடும் மழை, கடற்கொந்தளிப்புக்கு மத்தியில் கிளாலிப் படகுச் சேவை தடையின்றி நடைபெற்றுள்ளது.

நேற்றும் பெருமளவு பயணிகள் கிளாலி போய்ச் சேர்ந்தவர். (56)

4 பீரங்கிப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் அமைப்பது பற்றி பிரான்ஸில் விசேஷ பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இப்பயிற்சி காலத்தில் இருபடகுகள் பிரான்ஸில் வைத்து அமைக்கப்படும் இலங்கை திரும்பிய பின்னர் மேலும் இருபடகுகள் அமைக்கப்படும்.

அதிவேகத்தில் செல்லக் கூடிய இப்படகுகள் அடுத்தாண்டு இறுதிக்குள் சிறிலங்கா கடற்படையினரிடம் ஒப்படைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

டொக்யாட் நிறுவனம் 30 பீரங்கிப்படகுகளை ஏற்கனவே சிறிலங்கா படையினருக்கு அமைத்து வழங்கியது குறிப்பிடத்தக்கது. (சி)

2ம் உலகப் போரில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பி. எம் பி சிறில் நாடாளுமன்றில் கூறியுள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்,

இப்பிரச்னைக்கு இராணுவத் தீர்வே முடிவானது. இந்த யுத்தம் இராணுவ ரீதியில் தீர்க்கப்ப வேண்டும். இதற்கு சகல கட்சிகளும் ஆதரவளிக்க வேண்டும்.

நாட்டில் அபிவிருத்தியை உடனடியாக நிறுத்தி புலிகள் இருக்கும் பிரதேசங்களை குண்டு வீசி அழிக்கவேண்டும். இதற்கு அனைவரும் ஒத்துழைக்கவேண்டும். அபிவிருத்தியின் பெயரால் இதில் தாமதம் ஏற்படுமானால் நாம் இந்த யுத்தத்தில் தோற்கவேண்டி வரும்.

சகல சிங்கள தலைவர்களும் இந்த விடயத்தில் வித்தியாசம் காட்டாமல் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்றார். (சி)

சுப்பிரமணிய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாவுக்கு எதிராக தீவிர பிரசாரங்களையும் உண்மைகளையும் அம்பலப்படுத்தி வருவதால் அவரது உயிருக்கு ஆபத்து ஏற்படலாமெனவும் திரு. மூப்பனார் அச்சம் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவை பதவியிறக்கும்வரை ஓயப்போவதில்லை என சுப்பிரமணியசுவாமி கூறியுள்ளதும் தெரிந்ததே. (சி)

அராலித் துறை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யோகத்தினையும் செய்தனர்.

இதை அடுத்து பனாலியில் இருந்து வந்த ஹெலி ஒன்று அராலி, வட்டுக்கோட்டை, நவாலி பகுதிகளை வட்டமிட்டுச் சென்றது. (139-56-சு)

ரெலோவின்

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

திட்டத்தை இவை ஆதரிக்காதெனவும் குறிப்பாக இ. தொ. கா. இதனைக் கண்டித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

இதற்கிடையில் ரெலோவின் இந்த யோசனைக்கு ஆதரவு தெரிவித்து ஏனைய தமிழ் கட்சிகளும் ஏற்கவேண்டுமெனச் சில முஸ்லிம், சிங்கள தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றார்கள் (சி)

யுக்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோரப்பட்டுள்ளது.

முன்னாள் பொலிஸ் அதிபர் பிரேமதாச உடுகம்பொல சம்பந்தமாக செய்திவெளியிட்ட 'அத்த' பத்திரிகை மீதும் அரசாங்கத்தால் போடப்பட்ட வழக்கு நீதிபதியால் தள்ளப்பட்டுள்ளது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சு)

ரேகண

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பக்ஸ தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சிக் கூட்டமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட மனித சங்கிலிப் போராட்டம் ஜனதா விமுக்தி பெரமுன முன்னாள் தலைவர் ரேகண விஜயவீராவின் 3-வது இறந்த தினத்தன்று நடைபெறறுள்ளது.

இப்போராட்டம் இன்றும் நடைபெறும். அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களை லங்கா சமஜமாசக் கட்சித் தலைவர் பேர்னாட் சொய்சாவும், கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பி. டி. சில்வாவும் கண்டித்து கருத்து வெளியிட்டார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சு)

மாவீரர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சிரமதானவேலைகளில் பொதுமக்கள், பொது ஸ்தாபனங்கள் உட்பட பலவேறு துறைகளைச் சார்ந்தவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் வீதிகளில் நிழல் மரங்கள் நாட்டுவதோடு கிராமங்கள்தோறும் மாவீரர்களை நினைவுகூரும் எழுச்சிக் கருத்தரங்குகளும் இன்று நடைபெறவுள்ளன. இவற்றின் விபரம் வருமாறு:

வலிகாமம் பகுதியில் இன்று மாலை 6-30 மணிக்கு பின் வரும் வட்டவைகளில் கருத்தரங்குகள் நடைபெறும். சண்டிலிப்பாய் - கட்டுடை அம்பாள் சனசமூகநிலையம், நல்லூர்-நாயன்மார்கட்டு ச. ச. நிலையம், கல்வியங்காடு ச. ச. நி, யாழ்ப்பாணம்-வண்ணார்பண்ணை வள்ளுவன் ச. ச நி உடுவில் கந்தரோடை ஞானவைரவர் ச. ச, நி, அரியாலை பூம்புகார்.

தென்மராட்சியில் இன்று மாலை 7-30 மணிக்கு கைதடி ஸ்ரீமுருகன் ச ச. நி, கொடிகாமம் ச. ச. நி, தம்பகாமம் கோடில்ஸ் ச ச. நி, சங்கத்தானை இந்தியடிப்பிள்ளையார் கோவில், கெற்பலி, பண்டிதர் குடியிப்பு.

வடமராட்சி கிழக்கில் வத்திராயன் ச. ச. நி. வடமராட்சி வடக்கில் தொண்டமானாறு ச ச. நி. வலிகாமம் கிழக்கு பூம்புகார் ச ச நி, மணிப்புரி ச. ச. நி, கொழும்புத்துறை ச. ச. நி.

சிரமதானங்கள் நடைபெறும் இடங்கள்: கெற்பலி பண்டிதர் குடியிருப்பு, எல்லங்குளம் பொதுமயானம், சங்கானை பிரதான வீதி, சண்டிலிப்பாய் பிரதான வீதி, கோப்பாய் சிவகுமாரன் பூங்கா, உடுவில் ஆச்சிரமம், சிந்து முகாம், இணுவில் முகாம், கொக்குவில் நந்தாவில் வாக்கால், மருதங்கேணி வைத்தியசாலை. (வி)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1992ம் ஆண்டு நவம்பர் மாதம் 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registerrd as a News Paper at the General Post office, Sri Lanka under Licence Number B/10336/8